தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி



ஸ்ரீ ப்ரஹ்ம வித்யாம்பிகை உடனுறை

ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் ஆலய

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை

(திருவெண்காடு, சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்)

**ஸ்ரீ விஸ்வாவசு வருடம்**

**ஆனி மாதம் 23ம் தேதி (7 / 7 / 25) திங்கட்கிழமை**

**காலை 9 மணிக்கு மேல் 10:20 மணிக்குள்**

**ஸ்ரீ ப்ரஹ்மவித்யாம்பிகை உடனுறை ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் ஸ்வாமி, ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்**

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்



ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ:
ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர






ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்
அவர்களின் அநுக்ரகத்துடனும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள், ஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
ஆஞ்ஞையின்படியும் பரிபூரண அநுக்ரகத்துடனும்

ஆகியோரின் அருளாசியோடும் நடைபெறும்

## புனராவர்த்தன ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



**சுவேதாரண்யேஸ்வரர் / வெண்காட்டு நாதர். பிரமவித்யாம்பிகை**

**தல மரம்:** அரச மரம் , ஆல மரம் , கொன்றை மரம், வில்வமரம்

**தீர்த்தம் :** முக்குளம் (சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள்; முதலில் அக்கினி, பிறகு சூரிய இறுதியாக சந்திர தீர்த்தம் என்றமுறையில் நீராடுவர்.)

**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார்,பிரம்மன், இந்திரன், வெள்ளையானை, சிவப்பிரியர், வேதராசி, சுவேதகேது, சுவேதன், விஷ்ணு, சூரியன், சந்திரன், அக்னி, அகத்தியர், நாரதர், வியாக்ரபாதர், கிருஷ்ண த்வைபாயனர் முதலியோர்.

இங்கு வழிபட்ட பிரமனுக்கு அம்பாள் வித்தையை உபதேசித்தாள்; ஆதலின் அம்பாளுக்கு **பிரமவித்யாம்பிகை** என்று பெயர் வந்தது.

உத்தாலக முனிவரின் எட்டு வயது குமாரனான ச்வேதகேதுவின் உயிரைப் பறிக்கவேண்டி யமன் பாசக் கயிற்றை வீசியபோது சுவாமி வெளிப்பட்டுக் காலசம்ஹாரம் செய்ததாக ஸ்தலபுராணம் சொல்கிறது.

சலந்தரன் மகன் மருத்துவன்; இறைவனை நோக்கித் தவம் செய்தான், இறைவன் காட்சி கொடுத்து சூலத்தைத் தந்து அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறியுறுத்தி அருள் செய்தார். ஆனால் மருத்துவனோ அதைத் தேவர்கள் தவம் செய்யவொட்டாதவாறு துன்புறுத்தப் பயன்படுத்தினான். அறிந்த இறைவன் சினந்து நந்தியை அனுப்பினார்; மருத்துவன் மாயச் சூலத்தை அவர்மீது ஏவ, அச்சூலம் நந்தியின் உடலை ஒன்பது இடங்களில் துளைத்துவிட்டுப் போயிற்று. இஃதறிந்த இறைவன் தாமே அகோரமூர்த்தியாக (**இத்தலத்தில் சிறப்பு மூர்த்தியாக அகோரமூர்த்தியே உள்ளார்**) வடிவுகொண்டு வந்து அவனை அழித்தார் என்பது வரலாறு.

**அவ்வாறு அழித்த (மாசி மகத்து மறுநாள்) நாள் ஞாயிற்றுக்கிழமை பூர நட்சத்திரம்.**

சுவாமிக்கு எதிரில் வெளியே உள்ள நந்தியின் உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம்.

வெளிப்ராகாரத்தில் வடமேற்கு மூலையில், தனி உள் ப்ராகாரத்துடன் பிரம்மவித்யாம்பிகையின் சன்னதி கிழக்கு நோக்கு அமைந்துள்ளது. **பிரமனுக்கு வித்தையை உபதேசித்ததால் இப்பெயர் வந்தது.** திருநாங்கூரில் மதங்க முனிவரின் புதல்வியாகத் தோன்றிய அம்பிகை, தவம் செய்து. ஈச்வரனைத் திருவெண்காட்டில் மணந்து கொண்டதாகப் பத்ம புராணம் கூறுகிறது.

பின் இரு கரங்களில் தாமரையும், அக்ஷ மாலையும் ஏந்தி, முன்னிருகரங்கள் அபய வரதமாகக் அருட்காட்சி வழங்குகிறாள் அம்பிகை.

பிரம்மா சன்னிதி இங்குள்ளது. இவ்வூர் சங்கல்பத்தில் "ப்ரஹ்ம ஸ்மாஷனே" என்று சொல்லப்படுகிறது.

இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தை இங்கு திருவெண்காடரை வழிபட்டு நீக்கிக்கொண்டான் இங்கு நடைபெறும் மஹோத்சவம் இந்திர மஹோத்சவம் என்று அழைக்கப்படுகிறது. இந்திரனே வந்து நடத்தி வைப்பதாக ஐதீகம். இந்திரன் ஐராவதம் என்னும் தன் வெள்ளை யானையின் மேல் பவனி வந்தபோது துருவாச முனிவர் தந்த மாலையை மதியாது வாங்கி, யானையின் மத்தகத்தின் மேல் வைக்க, யானையோ அம்மாலையைக் காலிலிட்டு மிதித்தது. துருவாசர் சினந்து யானையைக் காட்டானை ஆகுமாறு சபித்தார். பின்னர் யானை தவறுக்கு வருந்தி, முனிவரைப் பணிந்து சாபவிமோசனம் வேண்டியது. முனிவர், திருவெண்காட்டீசரைச் சென்று தொழச் சாபம் நீங்குமென்றார். அதன்படி ஐராவதம் திருவெண்காட்டில் சில காலம் காட்டானையாகத் திரிந்தது. பின்னர் திருவெண்காட்டில் ஈசான திசையில் தன் பெயரில் ஒரு தடாகம் அமைத்துச் சிவலிங்கம் ஸ்தாபித்து, வழிபாடியற்றி ஈசன் அருள் பெற்று மீண்டும் இந்திரலோகம் சேர்ந்தது.

**யானை அமைத்த தடாகம் இன்றும் யானை மடு என்று வழங்குகிறது.**

யானை வெண்காட்டில் தவமியற்றியதைத் திருஞானசம்பந்தர், "வெள்ளானை தவஞ்செய்யும் மேதகு வெண்காட்டான்" என்றும், யானை வழிபட்டதை "பெரிய உருவத்தானை வணங்கும் வெண்காடே" என்றும், 'இந்திரன் கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்' என்றும், யானை அருள் பெற்றதை, 'அடைந்த ஐராவதம் பணியமிக்க தனக்கருள் சுரக்கும் வெண்காடு" என்றும் பாடுகிறார். திருநாவுக்கரசர் "வெள்ளானை வேண்டும் வரங்கொடுப்பர்" என்று பாடுகிறார்.

முற்கல முனிவரின் குமாரரான சிவப்பிரியர் திருவெண்காட்டிற்கு வந்து ஈசனை வழிபாடு செய்து கொண்டிருந்தார். ஒருநாள் அவர் தாமரை மலர்களைக் கொய்து வரும்போது ஐராவதமெனும் யானையால் தாக்கப்பட்டார். அவர் நெஞ்சினுள் அஞ்செழுத்து அழுந்தியிருந்ததால் யானையின் கொம்புகள் அவரைக் குத்தாது யானையின் முகத்தில் அழுந்தி வயிற்றினுட் சென்றது. யானை நல்லுணர்வு பெற்றுச் சிவப்பிரியரிடம் மன்னிப்பு வேண்ட சிவப்பிரியர் அதனை மன்னித் தருளினார். பின்னர் வைகாசி மாதத்து அமாவாசையில் சிவப்பிரியர் சிவஜோதியில் கலந்தார்.

**கந்தப்புராணத் திருவிளையாட்டுப் படலம்'காழற்று தந்தம் அறஏகி வெண்காட்டில் ஈசன்கேழற்ற தாளர்ச்சனை செய்துகிடைத்து வைகும்வேழம்" என்றும்,திருவிளையாடற் புராணம் அர்ச்சனைப் படலம்"கோடு நான்குடைய வேழம் தானவன் குறைந்த கோட்டைப்பாடற நோற்றுப் பெற்ற பதியிது" என்றும் இந்நிகழ்ச்சியைப் பாடுகிறது.**

வேதராசி என்ற அந்தணன் ஊருக்குச் செல்லும் போது தான் எடுத்துச் சென்ற கட்டமுதை ஓர் ஆலமர பொந்தில் வைத்தான். அச்சோற்றில் பாம்பொன்று நஞ்சை உகந்தது. அவன் அச்சோற்றினை ஒரு

மறையவனுக்கு இட மறையவன் அதனை உண்டு மாண்டான். வேதராசியைப் பிரம்மஹத்தி தோஷம் தொடர்ந்தது. அவன் திருவெண்காட்டை அடைந்ததும் அது அவனை விட்டு நீங்கியது. வேதராசி வெண்காட்டீசனை வழிபட்டு எமதூதரிடமிருந்து தப்பி இறையடி நீழலை எய்தினான்.

உத்தால முனிவரின் புத்திரராகிய சுவேதகேது எட்டு வயதுடன் தம் ஆயுள் முடியுமென்பதை உணர்ந்து திருவெண்காட்டிற்கு வந்து சிவபூசை செய்து கொண்டு இருந்தார், எட்டாம் வயது முடியும் நாளில் எமன் வந்து சுவேதகேதுவின் மேல் பாசத்தை வீச, சிவபூசை தடைப்படுகிறதே என அவர் வருந்த சிவபெருமான் வெளிப்போந்து எமன் வீசிய பாசத்தை அழித்தருளினார். பின்னர் சுவேத கேது திருவெண்காட்டில் சில காலமிருந்து இறைவனின் ஆடல் கண்டபின் அவன் திருவடியிற் சேர்ந்தார்.

சுவேதன் என்னும் மன்னர் வாதாபி எனும் தன் மகனுக்கு அரசாட்சியை அளித்து விட்டு, தன் மனைவி சுலோசனையுடன் வானப்பிரஸ்தாச்சிரமத்தில் இருக்கையில், தன் மனைவியைப் பிரிந்த பின்னர் சாவில்லாத வரந்தரும் திருவெண்காட்டை அடைந்து தவமும் வழிபாடும் செய்து வந்தார். ஒருநாள் எமன் சுவேதனை அணுகிப் பாசத்தைப் வீசினான். சுவேதன் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டான். அப்போது திருவெண்காடர் அங்கே தோன்றக் காலன் அஞ்சி ஓடி வீழ்ந்தான். சிவபெருமான் சுவேதனுக்குச் சிவசொரூபமளித்தார். பின்னர் தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி எமனையும் எழுப்பியருளினார்.

சத்தியநல்விரதன்சத்திய நல்விரதன் என்பவர் நாகையை ஆண்ட மன்னர். இவன் ஆட்சிக்காலத்தில் சாக்தமத பிராமணர் ஒருவர் பசியோடு வந்த பிராமணருக்குக் கள்ளைக் கொடுத்து விட்டார். கள்ளுண்ட பிராமணரைத் திருவெண்காட்டிற்கு அழைத்து வந்து அவர் செய்த பாவத்தைக் கழுவத் துணை செய்தான் சத்தியநல்விரதன். பின்னர் தன்னரசை மகனிடம் விடுத்து, திருவெண்காட்டி லேயே தங்கி வழிபாடியற்றி இறையருள் பெற்றான்.

---

**காசிக்குச் சமானமாகக் கூறப்படும் ஸ்தலங்கள் ஆறு**

"ஸ்வேதாரண்யம் பஞ்சநதம் கௌரீ மாயூரம் மார்ஜுனம்   சாயாவனம்ச ஸ்ரீ வாஞ்சியம் காசீ க்ஷேத்ர ஸமாநிஷட்"

**திருவெண்காடு, திருவையாறு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர் , திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம்**

வால்மீகி ராமாயணத்தில் ஸ்வேதாரண்யம் குறிப்பிடப்பட்டுள்ளது. சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில் எமனை சுவேதாரண்யேஸ்வரர் எவ்வாறு சம்ஹாரம் செய்தாரோ அவ்வாறு கரதூஷணாதிகளை இராமன் சம்ஹாரம் செய்தான் என்று வான்மிகி குறிப்பிட்டுள்ளார் இத்தலத்தின் தொன்மைக்கு இது சான்றாக உள்ளது.

சபபாத கரோ பூமன் தஹ்மயமான சராக்னி நருத்ரேநேவ வினிர்தக்த சுவேதாரண்யே யதாந்தகஹா - (ஆரண்ய காண்டம்)

| | |
|---|---|
| 3 | நலம் செய்த முக்குளநீர் உள்ள பதி திருவெண்காடு<br>மூன்று மூர்த்திகள் - சுவேதாரண்யர், அகோரர், நடராசர்<br>மூன்று அம்பிகைகள் - பிரம்மவித்யாம்பிகை, துர்க்கை, காளி<br>மூன்று தல மரங்கள் - வடஆலமரம், கொன்றை, வில்வம்<br>மூன்று தீர்த்தங்கள் - சூரிய, சந்திர, அக்கினி<br><br>**இத்திருக்கோயிலில் உள்ள முக்குளத்தில் (வெண்காட்டு முக்குளநீர்) நீராடி இறைவனை வழிபடின் நினைத்த காரியம் கைகூடும் என்பது ஞானசம்பந்தர் அமுதவாக்கு.**<br>**"சங்குமுகம் ஆடி சாயாவனம் பார்த்து, முக்குளமும் ஆடி முத்திபெற வந்தானோ" என்று ஒரு தாலாட்டுப் பாட்டும் இத்தல முக்குளச் சிறப்பை விளக்குகின்றது.** |

# தல சிறப்புகள்...

1. திருவெண்காடு புதன் கிரகம் உரியவர்கள் வழிபடவேண்டிய சிறப்புத் தலமாகும். புதன் சந்நிதிக்குப் பக்கத்தில் முள் இல்லாத வில்வமரம் உள்ளது.
2. இத்தலத்தில் சந்திரன் வழிபட்ட லிங்கம் உள்ளது.
3. அகோரமூர்த்தியின் மூல மற்றும் உற்சவ திருமேனிகள் அற்புத வேலைபாடகளமைந்துள்ளன;
4. காணத்தெவிட்டாத கலையழகு நடராசசபை தில்லையைப் போலச் செப்பறையில் அமைந்துள்ளது; உள்ளே உள்ள ஸ்படிக லிங்கத்திற்கு தில்லையைப் போலவே நாடொறும் அபிஷேகம் நடைபெறுகிறது. **சிதம்பர இரகசியமும் உள்ளது.** ஆதி சிதம்பரம் என்று இந்த ஊர் குறிப்பிடப்படுகிறது.
5. நவ தாண்டவங்களை ( ஆனந்த தாண்டவம், காளி ந்ருத்தம், கௌரீ தாண்டவம், முனி ந்ருத்தம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம் , புஜங்க லலிதம், சம்ஹார தாண்டவம், பைஷாடனம்) நடராஜ மூர்த்தி இங்கு ஆடினாராம். சிதம்பரத்தில் சகுணமாக ஆடி முக்தியைத் தரும் மூர்த்தி, இங்கு நிற்குணமாக ஆடி இம்மைக்கும் மறுமைக்கும் பலன்களை அளிக்கிறார்.இவரது காலில் பதினான்கு சலங்கைகள் உள்ள காப்பு காணப்படுகிறது. பதினான்கு புவனங்களும் அவர் அசைந்தால் மட்டுமே அசையும் என்பதை இது காட்டுகிறது.

6. இடுப்பில் அணிந்துள்ள 81 வளையங்கள் உள்ள அரை ஞாண், பிரணவம் முதலான 81 பத மந்திரங்களை உணர்த்தும். 28 எலும்பு மணிகளை அணிந்திருப்பது, 28 சதுர் யுகங்கள் முடிந்திருப்பதைக் காட்டுகிறது.கூர்ம- வராக அவதாரங்களை அடக்கி அவற்றின் அடையாளமாக ஆமையின் ஓட்டையும், பன்றிக் கொம்பையும் மார்பில் அணிந்திருக்கிறார். ஜடாமுடி பதினாறு கலைகளை உணர்த்துவதாக உள்ளது. அதில் 15 சடைகள் பின்னால் தொங்குகின்றன. ஒன்றுமட்டும் கட்டப்பட்டுள்ளது. திரு முடியில் மயில் பீலியும், கங்கையும், இளம் பிறைச் சந்திரனும், ஊமத்தம் பூவும், வெள்ளெருக்கும் இருக்கின்றன. நெற்றிக்கண் அழகாகத் தெரிகிறது.
7. சிதம்பரத்தைப் போலவே, ரஹஸ்யமும், ஸ்படிகலிங்க பூஜையும் நடைபெறுகின்றன.
8. துர்க்கை இங்கு மேற்கு நோக்கியிருப்பது விசேஷமானது. திருமணமாகாதோர் இச்சந்நிதியில் பிரார்த்தனை செய்து கொள்வது மரபாக இருந்து வருகின்றது.
9. ஆறுகால வழிபாடுகள்;
    a. சுவேதாரண்யேசுவரருக்கு காமிகாகமத்தின்படியும்,
    b. அகோரமூர்த்திக்கு காரணாகமத்தின்படியும்,
    c. நடராசப்பெருமானுக்கு மகுடாகமத்தின்படியும் பூசைகள் நடைபெறுன்றன.
10. பிரதி ஞாயிறுகளிலும்- குறிப்பாக கார்த்திகை ஞாயிறுகளில் அகோர பூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது.மாசி மாத பிரமோத்ஸசவத்தில் , பூர நக்ஷத்திரத்தில் அகோர மூர்த்திக்கு விசேஷ அபிஷேகமும், வீதி உலாவும் நடைபெறுகிறது.

## திருவெண்காடு திருவிழாக்கள்:

**சித்திரை** திருவோணத்தில் நடராசர் அபிடேகம்

**வைகாசி** அமாவாசையில் சிவப்பிரியர் மணி கர்ணிகையில் தீர்த்தமாடுதல், வெள்ளை யானைக்குச் சாப விமோசனம்.

**ஆனி** உத்திரத்தில் நடராசர் அபிடேகம்.

**ஆடி** பட்டினத்தார் சிவதீட்சை பெறத் திருவெண்காட்டிற்கு வருதல், சிவபெருமான் பிட்சாடனர் வடிவில் மணிகர்ணிகையில் தீர்த்தம் கொடுத்தல், சிவபூசை செய்வித்தல் இரவு இடப வாகனராய்க் காட்சி தருதல், அம்பாளுக்கு ஆடிப்பூர-பத்து நாள் விழா. ஆடி அமாவாசைக்கு சங்கமத்திற்கு சுவாமி எழுந்தருளல்.

**ஆவணி** வளர்பிறை சதுர்த்தசியில் நடராசர் அபிடேகம். கோகுலாட்டமி பெருமாள் சேவை. விநாயகர் சதுர்த்தி. ஆவணி மூலம் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.புரட்டாசி வளர்பிறை சதுர்த்தசியில்

நடராசர் அபிடேகம். நிறைபணி, தேவேந்திரபூசை, நவராத்திரி விழா, விசயதசமியன்று சுவாமி மணிகர்ணிகை ஆற்றின் கரையில் அம்பு போடல், அம்பாளுக்கு இலட்சார்ச்சனை.

**ஐப்பசி** அசுபதியில் அன்னாபிடேகம். வளர்பிறை பிரதமை தொடங்கி கந்த சஷ்டி விழா.கார்த்திகை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஸ்ரீ அகோர மூர்த்திக்கு அபிடேகமும் பூசையும் நடைபெறும். மூன்றாவது ஞாயிறன்று மகாருத்ராபிடேகமும் விபூதி அலங்காரமும் நடைபெறும். சோமாவாரந்தோறும் சுவேதாரண்யேசுவரருக்கு 1008 சங்கா அபிடேகமும் நடைபெறும்.

**பரணி, கார்த்திகை** தீபவிழாக்கள்.

**மார்கழி** தனுர்மாத பூசை, சதயத்தன்று மாணிக்கவாசகர் விழா, டோலோற்சவம் திருவாதிரையில் நடராசர் தரிசனம் நடைபெறும்.

**தை** சங்கராந்தி, மறுநாள் அம்பாள் கனுகுளிக்க மணிகர்ணிகைக்குப் போதல். சுவாமி குதிரை வாகனத்தில் பாரி வேட்டைக்குச் செல்லுதல். ஐயனாருக்குப் பத்துநாள் விழா. பிடாரிக்குப் பத்துநாள் விழா.

**மாசி** இந்திரப் பெருவிழா, வளர்பிறை துவாதசி புனர்பூசத்தில் கொடியேற்றம்.2 ஆம் திருவிழா,3ஆம் திருவிழா, சுவேதகேதுவைப் பிடித்த எமனை எரித்தல். பூத வாகனம், மொட்டைச் சகோபுரம்.4ஆம் திருவிழா. மகம், பௌர்ணமி திதியில் சுவாமி காவிரி சங்கமத்துறைக்கு எழுந்தருளல்,5.ஆம் திருவிழா, பூர நட்சத்திரம். அகோர மூர்த்தி எழுந்தருளல். இரவு மருத்துவாசுர சங்காரம், இடப வாகனக்காட்சி, தெருவடைச்சான் சகோபுரம்.6ஆம் திருவிழா. யானை வாகனம்.7ஆம் திருவிழா. திருக்கல்யாணம், பூப்பல்லக்கு.8ஆம் திருவிழா. பிட்சாடனர் விழா அறுபத்து மூவர் வீதி உலா.9ஆம் திருவிழா-திருத்தேர்.10ஆம் திருவிழா. காலை நடராசர் வீதி உலா. முக்குளத்தீர்த்தம் கொடுத்தல் மாலை பஞ்ச மூர்த்திகள் இடப வாகனத்தில் மணிகர்ணிகைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தல்.11ஆம் திருவிழா. தெப்பத் திருவிழா.

**பங்குனி** சுக்லபட்சப் பிரதமையில் அகோர மூர்த்திக்கு இலட்சார்ச்சனை ஆரம்பம்.

பங்குனி உத்திரத்தில் (பௌர்ணமியில் பூர்த்தி, மறுதினம் விடையாற்றி.நவக்ரகங்களுள் ஒருவரும், வித்யாகாரகன்,மாதூலகாரகன், என்றெல்லாம் வழங்கப்படும் புதனுக்குத் தனி சன்னதி, ஆல வ்ருக்ஷத்தின் அடியில் ருத்ர பாதம் இருக்கிறது. இது பித்ருக் கடன் செய்ய உத்தமமான இடம்.வில்வ வ்ருக்ஷத்தின் அடியில் பிரம்ம சமாதி உள்ளது. சம்பந்தர் இங்கு வந்தபோது, ஊரெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சி அளித்ததால், அம்பாள் அவரைத் தன் இடுப்பில் தாங்கிவந்து சுவாமி தரிசனம் செய்வித்தாள் என்பது செவிவழிச் செய்தி. அதே கோலத்தில் "பிள்ளை இடுக்கி அம்மன்" என்ற பெயரில் அம்பாள் பிரகாரத்தில் நமக்குத் தரிசனம் தருகிறாள் அன்னை.அருகிலுள்ள கிராமங்களில் தொற்று நோய் பரவும் போது , யாராவது ஒருவர் மேல் அகோரமூர்த்தி ஆவேசமாக வந்து, விபூதி கொடுத்தவுடன் அந்நோய் மறைந்துவிடும்.

# திருவெண்காட்டின் முக்கியத்துவங்கள்

சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி திருவெண்காட்டு நங்கையும், அவரது தோழி சந்தன நங்கையும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக இருந்த ஸ்ரீ பரமசிவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானம் இங்கு மணிகர்ணிகா கட்டத்தில் இருக்கிறது.

திருவாவடுதுறை ஆதீன எட்டாவது குரு மகா சந்நிதானமாக விளங்கிய மாசிலாமணி தேசிக மூர்த்திகளின் சமாதி , மேல வீதியில் உள்ளது.

**திருவெண்காடுத் தலத்தில் 'ருத்ர பாதம் ' உள்ளது. காசியில் இருக்கும் 'விஷ்ணு பாத' வழிபாட்டைவிட மும்மடங்கு அதிக வீர்யம் உள்ளதும், பலனைக்கொடுப்பதும் இதன் விசேஷம். காசியில் 'விஷ்ணு பாத' வழிபாடு இத்தலைமுறைப் பாவங்களை நிவர்த்திக்கும் என்பது ஐதீகம் - இங்கு 'ருத்ர பாத'த்தை வழிபட்டால் 21 தலைமுறை / பிறவிப் பாவங்கள் தொலையும் என்பது முன்னோர் வாக்கு.**

சிவபெருமானின் **64** வடிவங்களில் **43** வது வடிவம் அகோரமூர்த்தி. திருவெண்காட்டில் அகோரமூர்த்தி தரிசனம் சிறப்பு வாய்ந்தது.

திருவெண்காடு கோயில் புதன் கிரகத்தின் சிறப்பு ஸ்தலமான புத ஸ்தலமாக அறியப்படுகிறது திருவெண்காட்டில் புதன் ஆண் கிரகமாக அருள்பாலித்து வருகிறார். இங்கு வந்து முதலில் விநாயகர், சுவாமி, அம்பாள், அகோரமூர்த்தி, - இவர்களை வழிபாட்டு, பின்னர் புதபகவானை வழிபடுதல் முக்கியம்.

இத்தலத்து புதனை வழிபடுவோருக்கு கல்வி, ராஜயோகம், குபேர சம்பத்து, திருமணம், உடல்நலச்செல்வம், சமூக அந்தஸ்து, குடும்பச்செழிப்பு, வித்தையில் மேன்மை, முதலிய 8 வகை அதிகாரங்கள் கிட்டும் என்பது ஐதீகம்.

நரம்பு சம்மந்தமான நோய்கள் உள்ளவர்கள் புதன் பகவானை வழிபட்டு வந்தால் நரம்பு சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளும் சரியாகும் என்பது மக்களின் அயராது நம்பிக்கையாக விளங்குகிறது.

**கோவில் சந்நிதிகளுக்கு, இந்துசமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் புதுக்குவிக்கும் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற இருப்பது நம் பாக்கியமே!**

**ஸ்ரீ விஸ்வாவசு வருடம்**

**ஆனி மாதம் 23ம் தேதி (7/7/25) திங்கட்கிழமை**

**காலை 9 மணிக்கு மேல் 10:20 மணிக்குள்**

**ஸ்ரீ ப்ரஹ்மவித்யாம்பிகை உடனுறை ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் ஸ்வாமி, ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்**

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

**ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாச்சார்ய பரம்பராகத முலாம்னாய ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பரம அனுகிரஹத்துடனும், ஸ்ரீ ஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பரம அனுகிரஹத்துடனும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வரரின் ஆக்ஞைப்படியும், கீழ்கண்ட நிகழ்ச்சிநிரலின்படி, அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால், பக்தகோடிகள் தவறாது கலந்துகொண்டு, ஸ்வாமி, அம்பாளின் கடாட்சத்தை பெற்று, குருவருளும் பெற்று உய்யுமாறு இறைஞ்சுகிறோம்.**

**இக்கும்பாபிஷேக வேள்வியில் பங்கு கொண்டு ஆன்மீக ஆன்றோர்கள் அனைவரும்** ஸ்ரீ ப்ரஹ்மவித்யாம்பிகை உடனுறை ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் **அருளுக்கு பாத்யமாக வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

| | |
|---|---|
| ஆலய சீரமைப்புக் கட்டுமான உபயதாரர்கள்,<br>கும்பாபிஷேக விழாக்குழு அங்கத்தினர்கள்,<br>ஆன்மீக அன்பர்கள்,<br>திருவெண்காடு கிராம மக்கள் | ஆலய நிர்வாகிகள், இந்து சமய அறநிலையத்துறை<br>திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் – 9840053289<br>திரு VC சுப்ரமணியன் – 99400 53289<br>மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை |

இக்கோயில் திருப்பணி வேள்வியை சிரமேற்கொண்டு,

கும்பாபிஷேக வேள்வியை நடத்தித் தருமாறும் பணித்து,

எங்களுக்கு வாய்ப்பளித்த தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை - ஸ்ரீ ப்ரஹ்மவித்யாம்பிகை உடனுறை ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர், நிர்வாகக் குழுவிற்கும், மேலும் எங்களுக்கு உறுதுணையாய் இருந்து வழிநடத்தும் ஸ்ரீ பாபு குருக்களுக்கும், நன்றியையும், வந்தனங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம்**



# திருவெண்காடு... எழில் காட்சிகள்






















# விழா நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| ஆனி 16<br>30/6/25 திங்கள் | காலை 9 மணி | தேவதா அனுக்ஞை, யஜமான் அனுக்ஞை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, ஸ்ரீ கணபதி ஹோமம் |
| | மாலை 5 மணி | நவகிரஹ ஹோமம், ஸ்ரீ லக்ஷ்மி ஹோமம் |
| ஆனி 17<br>1/7/25 செவ்வாய் | மாலை 5 மணி | பிரவேச பலி |
| ஆனி 18<br>2/7/25 புதன் | மாலை 4:30 மணி | வாஸ்து சாந்தி, மிருசங்கிரஹணம் |
| ஆனி 19<br>3/7/25 வியாழன் | மாலை 4 மணி | அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், யாகசாலை பூஜை தொடக்கம் |
| | இரவு 9 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 1 |
| | | |
| ஆனி 20<br>4/7/25 வெள்ளி | காலை 8:30 மணி | விசேஷ சந்தி, யாகசாலை பூஜை |
| | காலை 11 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 2 |
| | மாலை 5:30 மணி | விசேஷ சந்தி, யாகசாலை பூஜை |
| | இரவு 8:30 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 3 |
| | | |
| ஆனி 21<br>5/7/25 சனி | காலை 8:30 மணி | விசேஷ சந்தி, யாகசாலை பூஜை |
| | காலை 11 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 4 |
| | மாலை 5:30 மணி | விசேஷ சந்தி, யாகசாலை பூஜை |
| | இரவு 8:30 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 5 |
| | | |

| | | |
|---|---|---|
| **ஆனி** 22<br>6/7/25 ஞாயிறு | **காலை 8:30 மணி** | *விசேஷ சந்தி, யாகசாலை பூஜை* |
| | **காலை 11 மணி** | *பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 6* |
| | **மாலை 5:30 மணி** | *விசேஷ சந்தி, யாகசாலை பூஜை* |
| | **இரவு 8:30 மணி** | *பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 7* |
| | | |
| **ஆனி** 23<br>7/7/25 திங்கள் | **காலை 4 மணி** | *பரிவார யாகசாலை பூஜை* |
| | **காலை 5 மணி** | *மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 8* |
| | **காலை 5:10 மணி** | *யாத்ரா தானம்* |
| | **காலை 5:30 மணி** | *சமகாலம் (ஒரே நேரத்தில்) சகல பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம்* |
| | | |
| **ஆனி** 23<br>7/7/25 திங்கள் | **காலை 5 மணி** | *பிரதான யாகசாலை பூஜை* |
| | **காலை 7 மணி** | *மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 9* |
| | **காலை 7:10 மணி** | *யாத்ரா தானம்* |
| | **காலை 7:20 மணி** | *கடம் புறப்பாடு* |
| | **காலை 9:05 மணி** | *அனைத்து விமானங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம்* |
| | **காலை 9:20 மணி** | *அனைத்து பிரதான மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம்* |
| | **நண்பகல் 12 மணி** | *ஆச்சார்ய, யஜமான உற்சவம், பிரசாதம்* |
| | **மாலை 5 மணி** | *மஹாபிஷேகம்* |
| | **இரவு 7 மணி** | *திருக்கல்யாணம்* |
| | **இரவு 10 மணி** | *பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா* |



## கும்பாபிஷேக சர்வசாதகம்


கயிலைமணி சிவஸ்ரீ TN சோமசுந்தர சிவாச்சாரியார்
சிவஸ்ரீ TA தெக்ஷிணாமூர்த்தி சிவாச்சாரியார்
சிவஸ்ரீ D கந்தஸ்வாமி சிவாச்சாரியார்

## ஸர்வ போதகம்

சிவஸ்ரீ T A சுவாமிநாத சிவாச்சாரியார்
சிவஸ்ரீ N பட்டாபிராம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ S கணபதி சுப்ரமண்ய சிவாச்சாரியார்
சிவஸ்ரீ K சரபேச சிவாச்சாரியார்

## ஆலய அர்ச்சகர்கள்

சிவஸ்ரீ S அமிர்த சுப்பிரமணியன் சிவாச்சாரியார்
சிவஸ்ரீ D இராமநாத சிவாச்சாரியார்
சிவஸ்ரீ S சங்கர்கணேஷ் சிவாச்சாரியார்



**உங்கள் வருகையை அன்புடன் எதிர்நோக்குகின்றோம்.**


**திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் – 9840053289**

**திரு VC சுப்ரமணியன் – 99400 53289**

**மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை**

## ஸ்ரீ பிரம்ம வித்யாம்பிகா சமேத ஸ்வேதாரண்யேஸ்வரர், ஸ்ரீ அகோர மூர்த்தி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம், திருவெண்காடு, ஜூலை 7, 2025

சிறப்பு கலை நிகழ்ச்சிகள்

| நாள் / கிழமை | காலை 09:00 மணி முதல் 10:30 மணி வரை | காலை 10:30 மணி முதல் 12:00 மணி வரை | | மாலை 06:00 மணி முதல் 07:30 மணி வரை | இரவு 07:45 மணி முதல் 09:15 மணி வரை |
|---|---|---|---|---|---|
| 03.07.2025 - வியாழக்கிழமை | | | | **திருமதி R.ராஜமீனாக்ஷி** சிவராஜ் அவர்களின் நாகை ஸ்ரீ சிவாலயா மாணவிகளின் பாரதநாட்டியம் | ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆஸ்தான வித்வான் வீணை இசைவித்தகர் திருவையாறு **S. சுவாமிநாதன்** |
| 04.07.2025 - வெள்ளிக்கிழமை | **Dr.சபாபதி தீக்ஷிதர்** குழுவினரின் - பக்தி இன்னிசை | "ஸ்ரீ சகோதரிகள்" **மதுவந்தி விஜய் கணேஷ் & சுமேதா விஜய் கணேஷ்** குழுவினரின் - கர்நாடக சங்கீதம் | | சின்னதிரை புகழ் சென்னை **Dr ராதிகா வைரவேலவன்** சதுர் லக்ஷணா அகாடமி ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் குழுவினர் வழங்கும் பரதநாட்டியம் - "சிவ மார்க்கம்" | "வாத்ய சங்கீத சங்கமம்" **R.S.ஜெகந்நாதன்** குழுவினர் வில்லிவாக்கம் |
| 05.07.2025 - சனிக்கிழமை | கலை இளமணி **மாஸ்டர். வைபவ் மகேஷ்** - சங்கீத உபன்யாசம் - "கருணையின் வடிவம் கந்தன்" | சங்கீத **கலாநிதி லால்குடி கிருஷ்ணன்** குழுவினரின் வயலின் இன்னிசை | | நாட்டிய கலைமாமணி மெலட்டூர் பாகவத மேளா நாட்ய வித்யாலையா **திருமதி. ப்ரியம்வதா முரளி** குழுவினர் – "திருவெண்காடு க்ஷேத்ர மகிமை" பரதநாட்டியம் | கலைமாமணி திரு. **U.ராஜேஷ் குழுவினர்** - மாண்டலின் இன்னிசை |
| 06.07.2025 - ஞாயிற்றுக்கிழமை | **டெல்லி திருமதி. சித்ரா மூர்த்தி மற்றும் திரு. மூர்த்தி** IAS குழுவினரின் திருப்புகழ் இசை வழிபாடு | **குமாரி. மஹதி வெங்கட்** - சங்கீத உபன்யாசம் | | Dr. ரக்ஷா கார்த்திக் அவர்களின் மாணவி நாட்டிய தாரகை **குமாரி. ஸ்மிரிதி ஸ்ரீதர்** வழங்கும் பரதநாட்டியம் | இசை பேரொளி **Dr. கணேஷ் குழுவினரின்** பக்தி இன்னிசை |
| 07.07.2025 - திங்கட்கிழமை | **மகா கும்பாபிஷேகம்** | | | **திருக்கல்யாணம்** | **ஸ்வாமி புறப்பாடு** |

**கும்பாபிஷேக வர்ணனையாளர்கள்**

Dr. சீர்காழி சரவணன்

பேராசிரியர் முதன்மை முனைவர் தனவேலன்

இசை செல்வி அமிர்தா

**கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு**

ஸ்ரீ மகாலட்சுமி சாரிடபிள் ட்ரஸ்ட், சென்னை 600017